# பரிவர்த்தனை ஆவணம்

_________ம் வருடம் ____________மாதம் ___ம் நாள் ______________________________________________ என்ற முகவரியில் வசிக்கும் திரு_____________அவர்களின் குமாரர் சுமார் ___ வயதுள்ள திரு.________ (அடையாள அட்டை _____) (கைபேசி எண்._____) (இதுமுதற்கொண்டு இவர் முதல் பார்ட்டி என்று அழைக்கப்படுவார்)

____________________________________________ என்ற முகவரியில் வசிக்கும் திரு._________________________ அவர்களின் குமாரர் சுமார்_____வயதுள்ள திரு._______________ (அடையாள அட்டை _____) (கைபேசி எண்._____) (இதுமுதற்கொண்டு இவர் இரண்டாவது பார்ட்டி என்று அழைக்கப்படுவார்) ஆக நாம் இரு பார்ட்டிகளும் சேர்ந்து எழுதிக் கொள்ளும் பரிவர்த்தனை ஆவணம் என்னவென்றால்.

இதன் கீழ் சொத்து விவரத்தில் 'A' ஷெட்யூலில் விவரிக்கப்பட்டுள்ள சொத்தினை கடந்த __________ந் தேதியில் ______________ சார்பதிவாளர் அலுவலகம் 1 புத்தகம் , ______ வருடத்திய _________ம் ஆவண எண்ணாக பதிவு செய்யப்பட்ட கிரைய பத்திரப்படிக்கு, 1வது பார்ட்டி பெயருக்கு ஒரு கிரைய ஆவணம் எழுதிக் கொடுக்கப்பட்டு அது முதல் 'A' ஷெட்யூல் சொத்தினை 1வது பார்ட்டி சர்வ சுதந்திர பாத்தியங்களுடன் ஆண்டு அனுபவித்து வருகிறார்.

இதன் கீழ் சொத்து விவரத்தில் 'B' ஷெட்யூலில் விவரிக்கப்பட்டுள்ள சொத்தினை கடந்த __________ந் தேதியில் ______________ சார்பதிவாளர் அலுவலகம் 1 புத்தகம் , ______ வருடத்திய _________ம் ஆவண எண்ணாக பதிவு செய்யப்பட்ட கிரைய பத்திரப்படிக்கு, 2வது பார்ட்டி பெயருக்கு ஒரு கிரைய ஆவணம் எழுதிக் கொடுக்கப்பட்டு அது முதல் 'B' ஷெட்யூல் சொத்தினை 2வது பார்ட்டி சர்வ சுதந்திர பாத்தியங்களுடன் ஆண்டு அனுபவித்து வருகிறார்.

1வது பார்ட்டிக்கு சொந்தமான 'A' ஷெட்யூல் சொத்து 2வது பார்ட்டியின் இதர சொத்துக்கும், 2வது பார்ட்டிக்கு சொந்தமான 'B' ஷெட்யூல் சொத்து 1வது பார்ட்டியின் இதர சொத்திற்கும் சேகரமாய் உள்ளதால் நம் இருவரின்

Verified @ RealEstate ™

வசதியை கருத்தில் கொண்டு இதன் மூலம் நாம் இருவரும் ஒருவரின் சொத்தை மற்றோருவருக்கு பரிவர்த்தனை செய்து கொண்டோம்.

இப்பரிவர்த்தனை ஆவணத்தின்படி இன்று முதல் அடியிற்கண்ட ஏ ஷெட்யூல் சொத்தை நம்மில் 2வது நபரான திரு.________ அவர்களும் அடியிற்கண்ட பி ஷெட்யூல் சொத்தை நம்மில் 1வது நபரான திரு.________ அவர்களும் அடைந்துக் கொள்ள வேண்டியது. இனி அவரவர் அடைந்து கொள்ளும் சொத்தை அவரவர் பெயரில் பட்டாவை மாற்றிக்கொண்டு வரி வகையறாக்களை செலுத்திக்கொண்டு அவரவர் இஷ்டம் போல் தானாதி வினியோக விற்கிரையங்களுக்கு யோக்கியமாய் சர்வ சுதந்திர பாத்தியமாய் ஆண்டு அனுபவித்துக் கொள்ள வேண்டியது.

ஏ ஷெட்யூலுக்கு சம்மந்தப்பட்ட ஆதரவு தஸ்தாவேஜுகளை 1வது நபர் 2வது நபரிடமும், பி ஷெட்யூலுக்கு சம்மந்தப்பட்ட ஆதரவு தஸ்தாவேஜுகைள 2வது நபர் 1வது நபரிடமும் இன்றைய தேதியில் ஒப்படைத்துவிட்டோம்.

இனி அடியிற்கண்ட ஏ ஷெட்யூல் சொத்தைப் பொறுத்து நம்மில் 1வது நபருக்கோ அல்லது அவரின் வாரிசுகளுக்கு எந்தவிதமான பாத்தியமும் பின்துயர்ச்சியும் கிடையாது.

இதே போன்று அடியிற்கண்ட பி ஷெட்யூல் சொத்தைப் பொறுத்து நம்மில் 2வது நபருக்கோ அல்லது அவரின் வாரிசுகளுக்கு எந்தவிதமான பாத்தியமும் பின்துயர்ச்சியும் கிடையாது.

சொத்து விவரம்

இந்தப்படிக்கு நாம் இருவரும் அடியிற்கண்ட சாட்சிகள் முன்னிலையில் மனப்பூர்வமாய் சம்மதித்து எழுதிக் கொள்ளும் பரிவர்த்தனை ஆவணம்.

சாட்சிகள்

1.

2.

Verified RealEstate